வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு






மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 02.09.2024 திங்கட்கிழமை | இதழ் : 246 | பக்கங்கள் : 12


# ஜனாதிபதி தேர்தலில் சஜித்துக்கே ஆதரவு!

## தமிழ் அரசு கட்சி தீர்மானம்

• பொது வேட்பாளர் விலக வேண்டும்

- கோகுலன் -


வவுனியா, செப்ரெம்பர் 02

**நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சி தீர்மானம் எடுத்துள்ளதாக அந்தக் கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் எம். பி. அறிவித்துள்ளார்.**

அத்துடன், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதில்லை. பொது வேட்பாளராகப் போட்டியிடும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான பா. அரியநேத்திரன் விலக வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள் ளன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயல் குழுக்கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு 11



உலகப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவில் நேற்று தேர்த் திருவிழா நடைபெற்றபோது...! (படம் : ஐ. சிவசாந்தன்)

## யாழ்ப்பாணம் - சென்னை இடையே புதிய விமான சேவை ஆரம்பமானது

யாழ்ப்பாணம், செப். 02

சென்னை - யாழ்ப்பாணம் இடையே இண்டிகோ எயார்லைன்ஸ் புதிய விமான சேவையை நேற்று ஞாயிற்றுக்கிமை ஆரம்பித்தது.

சென்னையில் இருந்து பயணத்தை ஆரம்பித்த விமானம் 52 பயணிகளுடன் நேற்று பிற்பகல் 03.07 மணிக்கு பலாலியை வந்தடைந்தது.

இந்திய பயணிகள் வாத்திய இசை முழங்க அழைத்து வரப்பட்டனர்.




இதனைத் தொடர்ந்து, மங்கள விளக்கு ஏற்றல், வரவேற்பு நடனம், நினைவுப் பரிசில்கள் வழங்கல், கேக் வெட்டுதல் மற்றும் விருந்தினர்களின் உரை என்பன இடம்பெற்றன.

இதன் பின்னர், யாழ்ப்பாணத்திலிருந்து 74 பயணிகளுடன் சென்னையை நோக்கி விமானம் பயணித்தது.

விமானத்தில் பயணித்த 11

## கட்சியின் தலைவருக்கு தெரிவிக்கப்படவில்லை!

### கட்சியினரை சாடுகிறார் தலைவர் சேனாதிராசா!

யாழ்ப்பாணம், செப். 02

சஜித் பிரேமதாஸவுக்கு என்ன அடிப்படையில் ஆதரவு தெரிவிக்கப்பட்டது என்பது கட்சியின் தலைவருக்கு தெரிவிக்கப்படவில்லை - அது குறித்து தலைவருக்கு தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும் - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு 11

## வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று கொடி

வடமராட்சி, செப். 02

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வடமராட்சி - துன்னாலை வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலின் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9.15மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 11

## தமிழ் அரசு கட்சிக்கு சஜித் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 02

தனக்கு ஆதரவு தெரிவித்தமைக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு சஜித் பிரேமதாஸ நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடைபெற்றது. இதில், நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு தமது ஆதரவை அளிப்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 11



## மட்டு. ஆயராக அன்ரன் ரஞ்சித் கடமைகளை பொறுப்பேற்றார்

- அன்ரன் -

மட்டக்களப்பு, செப். 02

மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயராக கலாநிதி அன்ரன் ரஞ்சித் ஆண்டகை நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாக தனது பணிகளை பொறுப்பேற்றார்.

புதிய ஆயருக்கான வரவேற்பு - கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வுகள் மட்டக்களப்பு புளியந்தீவு - புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்றன.

ஆயர் அன்ரன் ரஞ்சித் ஆண்டகையை வரவேற்கும் நிகழ்வில் ஓய்வுபெற்ற ஆயர் ஜோசப் பொன்னையா, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன், மேலதிக அரசாங்க அதிபர் 11

## ரணில் - சஜித் இணைவு குறித்து யாழ்ப்பாணத்தில் இரகசிய பேச்சு?

யாழ்ப்பாணம், செப். 02

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ இணைவு குறித்து யாழ்ப்பாணத்தில் இரகசிய பேச்சு இடம்பெற்றிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜே. வி. பி. 11

## 5 வருடத்துக்கு மட்டுமே அவகாசம் கோருகிறேன்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

வவுனியா, செப். 02

கடந்த இரண்டு வருடங்களில் கட்டியெழுப்பப்பட்ட பொருளாதாரத்தை பலமான - உறுதித்தன்மைக்குக் கொண்டு வருவதற்காகவே நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறேன். அதற்காக 5 வருட கால அவகாசத்தை மாத்திரமே கோருகிறேன் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 11

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்:

## சர்வதேச விசாரணைக்கு அமைச்சர் சப்ரி தயாரா?

### ரெலோ கட்சி சவால்

யாழ்ப்பாணம், செப். 02


காணாமல் ஆக்கப்பட்டோர் எத்தனை பேர் என்ற வாய்க்கணக்குகளை சொல்வதை விடுத்து சர்வதேச விசாரணை நடத்துங்கள். இதன் மூலமே சரியான கணக்கை அறிந்து கொள்ள முடியும் என்று 11


உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தேரேறி அருள்பாலித்தான் நல்லூரான்...!


படங்கள் - ஐ. சிவசாந்தன்

















## மகா கும்பாபிஷேகம்!

தென்மராட்சி, செப். 02

கொடிகாமம் பார்வதி சமேத சிவன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் நாளை மறு தினம் புதன்கிழமை காலை 6.05 மணி முதல் 6.50 மணி வரையிலான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் சனிக் கிழமை ஆரம்பமான எண் ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிவரை நடை பெறும்.

சிவாகமரத்தினம் சிவசிறீ இராம. சிறீரங்கநாத குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பா பிஷேகத்தை நடத்தி வைப்பார்.

## நல்லூர் ஆலய சூழலில் இன்றைய நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், செப். 01

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல் கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடை பெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம் பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

முல்லைத்தீவு உருத்திர புரீஸ்வரர் ஆலய பிரதமகுரு சிவசிறீ அமிர்த சிறீஸ்கந்தரா ஜாக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலா சாலை அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன் பிரதம அதிதியாகவும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுகன் சிறப்பு அதிதியாகவும் வலிகாம கல்வி வலய ஆசிரிய ஆலோ சகர் சைவப்புலவர் செ. கந்த. சத்தியதாசன், முன்னாள் வலயக் கல்வி பணிப்பாளர் சுப்பிரமணி யம் சுந்தரசிவம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்கின்றனர்.

இதில், வசந்தபுரம் பாரதி அறநெறி பாடசாலை, கீரிமலை சிவத்தமிழ் அறநெறி, பாட சாலை, நகுலேஸ்வரம் குழந்தை வேல் சுவாமி அறநெறி பாட சாலை, தெல்லிப்பழை சிவன் அறநெறி பாடசாலை , நீலியம் பனை பிள்ளையார் அறநெறி பாடசாலை, சிறீ துர்க்காதேவி தேவஸ்தான அறநெறி பாட சாலை, இளவாலை ஒல்லுடை ஞான வைரவர் அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வுகளாக உரும்பி ராய் ஜெயானந்த ஜீவ நர்த்தனா லய இயக்குநர் ஜீவிதா ஆனந்த ராசா மற்றும் மாணவர்கள் வழங்கும் சண்முக சமர்ப்பணம், சகோதரிகள் ராகவி பிரசன்னா, ஜானவி பிரசன்னா இணைந்து வழங்கும் இசைக்கச்சேரி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப் பாளர் ய. அநிருத்தனன் தெரி வித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.09.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், ஆவணி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் அரசு கட்சியின் 'டீல்' அரசியல்

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானங்களில் எம். ஏ. சுமந்திரன் தொடர்ந்தும் தனித்துச் செல்வாக்கு செலுத்தக்கூடிய ஒருவராக இருக்கின்றார் என்பது மீண்டும் உறுதியாகியிருக்கின்றது. கட்சியின் உத்தியோகபூர்வமான முடிவை அறிவிக்க முன்னரே, தமிழ்ப் பொது வேட்பாளரை தோற்கடிப்பேன் என்று அவர் சூளுரைத்திருந்தார். அதனை நடைமுறைப்படுத்தும் நோக்கில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானம் வெளியாகியிருக்கின்றது. சுமந்திரன் கூறியது போன்றே அதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் வெற்றி பெற்ற சிறீதரனால் தமிழ் அரசுக் கட்சிக்குள் செல்வாக்குச் செலுத்த முடியவில்லை என்பதும் தெளிவாகின்றது. கட்சி ஒரு சிலரின் பிடிக்குள் சென்றுவிட்டது - இனி தமிழ் அரசுக் கட்சியை முன்னைய உரிமைசார் அரசியல் கட்சியாக முன்னிறுத்துவது முயல் கொம்பாகவே இருக்கும்.

சஜித் பிரேமதாஸ அப்படி எதை தமிழ் மக்களுக்காக செய்வதாகக் கூறியிருக்கின்றார் - அரசமைப்பிலுள்ள பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதாக கூறியிருக்கின்றார் - அதிலும், ஓர் உடன்பாடாக எதனையும் அவர் முன்வைக்கவில்லை. எனது வார்த்தைகளை நம்புங்கள் - அதுதான் உடன்பாடு என்கின்றார். இதனை நம்பித்தான் தமிழ் அரசுக் கட்சி பிரேமதாஸவுக்கு வாக்களிக்குமாறு கூறுகின்றது. ஆனால், இதே தமிழ் அரசுக் கட்சிதான் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தைத் தாண்டி எங்கோ போய்விட்டதாகவும் அதனை தும்புத்தடியாலும் தொடமாட்டோம் என்று கூறியவர்கள்.

ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டுவரப் போவதாகவும் "ஏக்கிய ராஜ்ய"வுக்குள் சமஷ்டி பதுங்கியிருப்பதாகவும் கூறியவர்கள் - அன்றைய சூழலில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தது. அதனைக் கொண்டு, அரசமைப்பில் இருப்பவற்றையும் ஏற்கனவே, பிரேமதாஸவால் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் பெற்றிருக்க முடியும். அன்றைய சூழலில் அதனை வலியுறுத்தியிருந்தால் ரணிலோ அல்லது மைத்திரியோ அதனை முற்றிலும் ஆதரிக்கக்கூடிய சூழல் இருந்தது. பாராளுமன்றத்திலும் முழுமையான ஆதரவிருந்தது ஆனால், அப்போது புதிய அரசியல் யாப்பு என்னும் மாயமானை நம்புமாறு தமிழ் மக்களை கோரியிருந்த சுமந்திரன் தலைமையிலான தமிழ் அரசுக் கட்சி இப்போது, சஜித் பிரேமதாஸ தரும் பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் இனிக்கும் என்கின்றது. இதனைத் தமிழ் மக்கள் எவ்வாறு எடுத்துக் கொள்ளப்போகின்றனர்?

இதிலுள்ள வேடிக்கையான விடயம் என்னவென்றால், ரணில் - மைத்திரி காலத்தில் முன்வைக்கப்பட்ட புதிய அரசியல் யாப்புக்கான யோசனையை உத்தேச முன்மொழிவை தாங்கள் முன்கொண்டு செல்லப் போவதாக அநுரகுமார திஸநாயக்க கூறுகின்றார். அவ்வாறாயின், அரசியல்ரீதியில் அநுரகுமார திஸநாயக்கவை அல்லவா தமிழ் அரசுக் கட்சி ஆதரித்திருக்க வேண்டும்? ஏன் அவ்வாறு செய்யவில்லை? இதற்கு பின்னாலுள்ள மர்மம் என்ன - இதற்கு பின்னாலுள்ள டீல் என்ன?

## நல்லூரான் திருவடி - 25

# ராம்ஸ்போதம் சோல்பரியின் தரிசனம்

அனந்த பாலகிட்ணர்

எண்பதுகளில் எமது தந்தையார் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றிய காலப்பகுதி. அம்மாவுடன் எனது தம்பியாரும் இரு சகோதரிகளும் ஒரு விடுமுறைக்காக மட்டக்களப்பு சென்றிருந்தோம். அச்சமயம் நாம் குடும்பத்தோடு இரு நாட்கள் ஓர் ஆச்சிரமத்தில் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்து, தந்தையார் எம்மை அங்கே அழைத்துச் சென்றார்.


அந்த ஆச்சிரமம் மட்டக்களப்பு செங்கலடியில் அமைந்துள்ள சிவதொண்டன் நிலையமாகும். அங்கே சென்றதும் தங்குவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டிருந்தன. அங்கே சென்று நாம் எமது அறைகளுக்குள் சென்றதும் மதிய போசனத்தின் பின்னர் தந்தையார் எம்மிடம் வந்து, "மாலை சரியாக ஆறு மணிக்கு ஆச்சிரம மேல் மாடியில் வழிபாடு நடைபெறும். குளித்துத் தயாராக வரவும் என்றார்." அவர் கூறியபடியே நாம் மாலை ஆறு மணிக்கு அங்கு சென்றோம்.

அந்த வழிபாட்டு மண்டபம் மிகத் தூய்மையோடு காணப்பட்டது. மண்டபத்தின் நடுவே யோகர் சுவாமியின் திருவுருவம் வைக்கப்பட்டு, அதன் முன்பாக மலர்கள் தூவப்பட்டு, விளக்கொன்று எரிய விடப்பட்டிருந்தது. சரியாக மாலை ஆறு மணிக்கு மிக வாட்டசாட்டமான ஆறடி வரை உயரமான ஆங்கிலேயர் ஒருவர் சிறு புன்னகையோடு அம்மண்டபத்தினுள் வந்தார். எமது தந்தையும் அவரும் பரஸ்பரம் மாலை வணக்கம் தெரிவித்த பின்னர் தந்தையாரிடம் குடும்பத்தவர்களோடு வந்திருப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைவதாக அவர் கூறினார்.

இடுப்பில் வெள்ளை வேட்டியுடனும் மேல் உடம்பில் எதுவும் அணியாது நெற்றியில் திருநீற்று குறியோடு அந்த ஆங்கிலேயர் காணப்பட்டார். அவர் மண்டபத்தினுள் வந்து சிறிய தீபத்தை யோகரது திருவுருவப் படத்துக்கு காண்பித்து வழிபட்டார். நாமும் அவரோடு வழிபட்டோம். அப்போது அங்கே வேறெவரும் இருக்கவில்லை. பூசை முடிவுற்றதும் எமக்கு விபூதியோடு, கைளில் மலர்களையும் தந்தார். இதன்பின்னர், நாம் எமது அறைக்குச் சென்றுவிட்டோம். தந்தையார் மட்டும் அவரோடு அப்பூசை மண்டபத்துக்கு வெளியே அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்.

இதன்பின்னர் தந்தையார் இராப்போசனத்துக்கு அழைத்துச்செல்ல வந்தபோது எம்மிடம் அந்த வெள்ளைக்காரர் பற்றி அறிய ஆவலோடு நாமிருப்போம் என்று கூறியவராக, அவரைப்பற்றி தெரிவித்தார். இலங்கையின் மகாதேசாதிபதியாக 1952ஆம் ஆண்டு முதல் 1954ஆம் ஆண்டுவரை இருந்த விஸ்கவுண்ட் சோல்பரி பிரபுவின் புதல்வரே ராம்ஸ்போதம் என்ற அந்த வெள்ளையர்.

தமது உயர் கல்வியை முடித்து,




சிலகாலம் பிரித்தானிய இராணுவத்திலும் பணியாற்றினார். இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்ததும் ஆன்மீக ஈடுபாடு கொண்டவராக ஒரு நல்ல குருவைத் தேடி இந்தியா முழுவதும் திரிந்துள்ளார் ராமஸ்போதம். இருந்தபோதிலும் தமக்குரியவரை காண முடியாதவராக இலங்கைக்கு வந்துள்ளார். இலங்கையில் அன்று உயர்பதவிகளில் இருந்த சில தமிழர்களிடம் தமது விருப்பத்தை வெளியிட்டுள்ளார். அவர்களில் பலர் யோகரின் பக்தர்கள். ராம்ஸ்போதமிடம் யாழ்ப்பாணம் சென்று யோகரை காணுமாறு அவர்கள் கூறியுள்ளனர்.

அவரும் யாழ்ப்பாணம் சென்று கொழும்புத்துறை குடிலாச்சிரமத்துக்கு சென்றுள்ளார். ஏனைய அடியவர்களை காணுவது போலவே அவரையும் யோகர் கண்டு கதைத்துள்ளார். ஆனால், ராம்ஸ்போதம் தாம் தேடிச்சென்ற ஞானகுருவான யோகர் ஒளிவடிவாக தென்பட்டதை உணர்ந்தார். இதன்பின்னர் அரிடமே சரணாகதி அடைந்தார். ஆரம்பத்தில் யோகர் அவரை பல தடவைகள் விரட்டியுள்ளார். இறுதியாக, "நீ ஒரு குட்டிநாய் போல எப்போதும் என்னிடம் வருகிறாய் . நான் உன்னை பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறி ஏற்றுக்கொண்டாராம்.

யோகரது அறிவுரையின் பேரிலேயே செங்கலடி சிவதொண்டன் நிலையத்தை ராம்ஸ்போதம் நிறுவியிருந்தார். யோகரை நாம் காணவில்லை. எமது பெற்றோர் அவரது பக்தர்கள். எனவே, தந்தையார் ஊடாக யோகரது சீடர் ராம்ஸ்போதமை கண்டதை ஒரு பாக்கியமாகவே கருதுகிறோம்.

(நாளையும் வளரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ராசிபலன்

செப்ரெம்பர் - 02 திங்கட்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 17
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : அமாவாசை

**மேடம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். நட்பு வட்டம் விரியும். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். போராடி வெல்லும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுக்கு ஆலோசனை தருவீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**துலாம்**
சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். மரியாதை கூடும். முயற்சியால் முன்னேறுவீர்.

**விருட்சிகம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்பட தொடங்குவீர்கள். வியாபாரத்தில் சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.

**மகரம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். பெரிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. தலைமைக்கு நெருக்கமாவீர்கள். காரியம் சித்தியாகும் நாள்.

**மீனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

# இலங்கையிலிருந்து சென்ற டோவல் தமிழ்நாடு ஆளுநரை சந்தித்து பேச்சு

சென்னை, செப். 02

இலங்கையிலிருந்து சென்ற இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தமிழ்நாடு ஆளுநர் என். ரவியை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஆளுநர் ரவியை சந்தித்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் மீனவர் பிரச்னை, போதைப்பொருள், வங்கதேசத்தினர் ஊடுருவல், பாதுகாப்பு குறித்து ஆலோசனை நடத்தினார் என்று தெரிய வருகின்றது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் நேற்று முன்தினம் தமிழ்நாடு வந்தபோது



இந்த சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது, இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது அதிகரித்துள்ளது. தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளமை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# போதைப்பொருள் ஒழிப்பில் கடும் நடவடிக்கை அவசியம்

## இணை அமைச்சர் எல். முருகன்

சென்னை, செப். 02

"போதைப் பொருட்கள் ஒழிப்பில் தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று மத்திய இணை அமைச்சர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய இணை அமைச்சர் எல். முருகன்,

"ரயில்வே திட்டங்களுக்காக, தமிழகத்துக்கு இந்த நிதியாண்டில் ரூ. 6,300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் ரூ.6,000 கோடி ஒதுக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை காங்கிரஸ் ஆட்சி காலத்தில் வெறும் ரூ.800 கோடியே ஒதுக்கப்பட்டது.

தமிழகத்தில் போதைப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. போதைப் பொருட்கள் மற்றும் மதுக்கடைகள் காரணமாக, ஒவ்வொரு கிராமத்திலும் 20 முதல் 30 பேர் விதவைகளாகின்றனர். எனவே, போதைப் பொருட்களை ஒழிப்பில் தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தீவிர முனைப்பு காட்ட வேண்டும்.

மும்மொழி கொள்கை வருவதால் என்ன பிரச்சினை?. மூன்றாவது மொழியாக தமிழை மற்ற மாநிலங்களில் கற்றுக் கொடுப்பதால் தமிழுக்கு தான் பெருமை. அதேபோல, தமிழகத்தில் இந்தியை நாங்கள் திணிக்கவில்லை, மூன்றாவதாக ஏதாவது ஒரு மொழியை கற்று கொள்ள வேண்டும் என்றுதான் கூறுகிறோம் - என்றார். (ஐ)

# அ. தி. மு. க. ஆர்ப்பாட்டம்

சென்னை, செப். 02

தி. மு. க. அரசை கண்டித்து எதிர்வரும் வியாழக்கிழமை அ. தி. மு. க. சார்பில் திருச்சி மாவட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அ.தி.மு.க. அரசின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட நேப்பியர் தடுப்பணை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. இந்தத் தடுப்பணை தி. மு. கவின் ஆட்சிக் காலத்திலேயே கட்டி முடிக்கப்பட்டது. இதில் ஊழல் நடந்திருக்கலாம். இந்த ஊழலை கண்டித்தும் தடுப்பணையை மீண்டும் கட்டவும் வலியுறுத்தி திருச்சியில் வரும் வியாழக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது - என்றுள்ளது.

# திராவிடர் கழகத்தின் முயற்சியாலேயே சாதி வாரி கணக்கெடுப்பு நடக்கவுள்ளது

## திராவிடர் கழக தலைவர்

காரைக்குடி, செப். 02

'திராவிடர் கழகத்தின் தொடர் முயற்சியால்தான் மத்திய அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த தயாராகி வருகிறது' என திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி தெரிவித்தார்.

காரைக்குடியில் திராவிடர் கழகம் சார்பில் குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழாவில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் கருத்துக் கூறுகையில்,

'தமிழக சமுதாயத்துக்காக தொண்டாற்றியவர் குன்றக்குடி அடிகளார். முற்போக்கான முயற்சிகளை எடுத்த அவரை பெரியாரே போற்றியுள்ளார். திராவிடர் கழகத்தின் தொடர் முயற்சியால்தான் சமூக நீதிக்கு அடையாளமாக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அரசு தயாராகி வருகிறது' என்றார்.

தொடர்ந்து உதயநிதி துணை முதல்வராவது குறித்த செய்தியாளர்கள் கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், 'அரசியலில் எது வேண்டுமானாலும் நடக்கலாம். அமெரிக்காவில் இருந்து வெற்றியுடன் திரும்பியதும் யாருக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை முதிர்ந்த அனுபவமுள்ள முதல்வர் தீர்மானிப்பார்' என்றார். (ஐ)

# ஹிந்தி கற்பவர்களில் தமிழ்நாடு முதலிடம்!

சென்னை, செப். 02

தென்னிந்திய மாநிலங்களில் தமிழகத்தில் இருந்துதான் அதிகளவிலான நபர்கள் ஹிந்தி மொழியை கற்றுக் கொள்கின்றனர் என்று ஹிந்தி பிரசார சபா தகவல் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் இரு மொழிக் கொள்கை தமிழ், ஆங்கிலம் பின்பற்றப்பட்டு வருகிறது. ஹிந்தி திணிப்புக்கு பரவலாக எதிர்ப்பு இருந்தாலும், விருப்பப்பட்டு அதை கற்றுக் கொள்பவர்களுக்கு தடை ஏதுமில்லை. தென்னிந்தியாவில் ஹிந்தியை அதிகம் படிக்கக்கூடிய மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்பதை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

நடப்பாண்டில் தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய தென் மாநிலங்களில் இருந்து 4 இட்சத்து 73 ஆயிரத்து 50 பேர் ஹிந்தி தேர்வை எழுதியுள்ளனர். இவர்களில் தமிழகத்தில் இருந்து மட்டும் 3 இலட்சத்து 54 ஆயிரத்து 655 பேர் தேர்வு எழுதியுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் மூல வாக்குச்சீட்டுகள் விநியோகம் இன்றுடன் நிறைவு

## நாளை மறுநாள் வாக்குப் பதிவு

கொழும்பு, செப். 02

**ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்குச் சீட்டுகள் விநியோகம் இன்றுடன் நிறைவடையும் என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்கு சீட்டுகள் விநியோகம் 95வீதம் நிறைவடைந்துள்ளது. இராணுவத் தளங்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டிய தபால்மூல வாக்குச் சீட்டுகளில் ஒரு பகுதி மாத்திரமே எஞ்சியுள்ளது என்று சிரேஷ்ட பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

தபால் மூல வாக்குச்சீட்டுகள் இன்று திங்கட்கிழமை விநியோகிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் 7 இலட்சத்து 12 ஆயிரத்து 318 அரச ஊழியர்கள் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். தபால் மூல வாக்களிப்பு நாளை மறுநாள் புதன்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து 1,745 முறைப்பாடுகள் பதிவு!

ශ්‍රී ලංකා මැතිවරණ කොමිෂන් සභාව
இலங்கை தேர்தல் ஆணைக்குழு
Election Commission of Sri Lanka

கொழும்பு, செப். 02

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கடந்த 31ஆம் திகதி நள்ளிரவு வரை ஆயிரத்து 745 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 711 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 965 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 10 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 59 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கிளிநொச்சி மருத்துவமனையில் 'ஓ' வகை குருதிக்கு தட்டுப்பாடு!

கிளிநொச்சி, செப். 02

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் 'ஓ' வகை குருதிக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அந்த மருத்துவமனையின் இரத்த வங்கி பிரிவு தெரிவித்துள்ளது.

ஓ பொசிற்றிவ், ஓ நெக்கற்றிவ் இரத்த வகைகளுக்கே தட்டுப்பாடு நிலவுகின்றது. குருதிக் கொடை வழங்க விரும்புவோர் மாவட்ட மருத்துவமனையின் இரத்த வங்கியுடன் தொடர்பு கொண்டு தினமும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை இரத்த தானம் செய்ய முடியும்.

அவசர - அவசிய நிலைமையை கருத்தில் கொண்டு குருதி கொடை அளிக்குமாறு பொது மக்களிடம் கிளிநொச்சி மாவட்ட இரத்த வங்கி பிரிவு கேட்டுள்ளது. (ஐ)

# விபத்தில் இருவர் பலி!

கொழும்பு, செப். 02

மோட்டார் சைக்கிளும் பேருந்தும் மோதிய விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

கொழும்பு - கண்டி வீதியில் கம்பஹா - போகமுவ பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இருவரும் கம்பஹா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஐந்து மாவட்டங்கள் டெங்கு அபாய வலயம்!


கொழும்பு, செப். 02

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையால் ஐந்து மாவட்டங்களின் 29 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய மிக்க வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கண்டி ஆகியவை டெங்கு அபாயமிக்க மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த வருடத்தில் இதுவரை 36 ஆயிரத்து 552 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 17 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 120 ஆகும். (ஐ)



# தனிநாயகம் அடிகளாரின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

வவுனியா, செப். 02

தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரின் 44ஆவது நினைவு தினம் வவுனியாவின் நகர மத்தியில் அமைந்துள்ள அவரின் சிலை அருகே நேற்று நடைபெற்றது.

வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் நடந்த இந்நிகழ்வில் தனிநாயகம் அடிகளாரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டதுடன் தனிநாயகம் அடிகளார் தொடர்பான சிறப்புரையும் நடந்தது.

இந்நிகழ்வில் வவுனியா நகரசபை செயலாளர் அ. பாலகிருபன், முன்னாள் நகர சபை உறுப்பினர் சேனாதிராசா, தமிழ்மணி அகளங்கன், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்க தலைவர் ரவீந்திரன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# ஜயசேகரவிடம் ரூ. 20 கோடி நட்டஈடு கோரும் பிரசன்ன!

கொழும்பு, செப். 02

தாம் பெற்ற மதுவரி அனுமதிப் பத்திரத்தை கம்பஹா, மாகேவிட்ட பிரதேசத்தில் வசிக்கும் மதுவரி உத்தியோகத்தர் ஒருவரின் பெயரில் வழங்கப்பட்டதாக பொய்யான அறிக்கையால் தமக்கு ஏற்பட்ட நற்பெயருக்கு 20 கோடி ரூபாயை நட்டஈடாக வழங்குமாறு ஆளும் கட்சியின் பிரசன்ன ரணதுங்க, தயாசிறி ஜயசேகர எம். பிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

உரிய இழப்பீட்டுத் தொகையை 14 நாட்களுக்குள் வழங்காவிட்டால் அதற்கான தொகையையும் அதற்கான சட்டரீதியான சட்டயையும் பெற்றுக் கொள்ள வழக்குத் தாக்கல் செய்யவுள்ளார் என்றும் அமைச்சர் தனது சட்டத்தரணி நதீஷா ஹெட்டியாராச்சி ஊடாக ஜயசேகர எம். பிக்கு கூறியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மாத்தறை, அக்குரஸ்ஸவில் நடைபெற்ற கூட்டத்தில் தமது கட்சிக்காரர் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தொடர்பில் தொலைக்காட்சி, பத்திரிகைகள், சமூக ஊடகங்கள் மற்றும் காலை செய்தி வாசிப்பு நிகழ்ச்சிகளில் தெரிவித்த கருத்துக்கள் பொய்யானவை என சட்டத்தரணி நதீஷா ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் இந்தக் கருத்து தொடர்பில், அதன் ஊழியர் மதுவரி ஆணையாளர் நாயகத்திடம் கேட்டபோது, தனது வாடிக்கையாளரின் பெயரிலோ அல்லது அவரது பரிந்துரையின் பேரிலோ வேறு எவருக்கும் மதுவரி அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை என எனது கட்சிக்காரருக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி நதீஷா ஹெட்டியாராச்சி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 15,000 வாக்குப் பெட்டிகள் தேர்தலுக்கு பயன்படும்!

கொழும்பு, செப். 02

ஜனாதிபதித் தேர்தலுக்கு 15 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குப் பெட்டிகள் பயன்படுத்தப்படவுள்ளன.

தேர்தல் ஆணையத்தில் தற்போது 25 ஆயிரம் வாக்குப் பெட்டிகள் உள்ளன என்று தேர்தல் ஆணையத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும், கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாக்குச்சீட்டின் நீளத்திலேயே இந்த ஆண்டுக்கான வாக்குச் சீட்டு குறியிடும் தாள் உள்ளது. இதன் நீளம் 26 அங்குலம் என தேர்தல் ஆணையத்தின் மூத்த அதிகாரி தெரிவித்தார். (ஐ)

# எரிபொருட்களின் விலைகள் குறைப்பு

கொழும்பு, செப். 02

நேற்று முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்வகையில் எரிபொருட்களின் விலைகளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் திருத்தியமைத்தது.

மாதாந்த எரிபொருள் விலை சூத்திரத்தின் பிரகாரம் இந்த எரிபொருள் விலை திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, 344 ரூபாயாக காணப்பட்ட 92 ரக ஒக்ரைன் பெற்றோல் ஒரு லீற்றர் 12 ரூபாயால் குறைக்கப்பட்டு 332 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

379 ரூபாயாக நிலவிய ஒக்ரைன் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றர் 2 ரூபாய் குறைந்து 377 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

317 ரூபாயாகக் காணப்பட்ட ஒட்டோ டீசல் லீற்றருக்கு 10 ரூபாய் குறைந்து 307 ரூபாயாகவும் 355 ரூபாயாக இருந்த சுப்பர் டீசல் 3 ரூபாய் குறைந்து 352 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளன.

மண்ணெண்ணெய் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

ஐ. ஓ. சி, சினோபெக் நிறுவனங்களும் எரிபொருட்களின் விலைகளில் மாற்றம் செய்துள்ளன. (ஐ)

# துப்பாக்கிச்சூட்டில் பெண் படுகாயம்!

கொழும்பு, செப். 02

தனது மனைவி மீது கணவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அவர் படுகாயமடைந்துள்ளார்.

பதுளை - பசறை - ஹிந்த கொடை பகுதியில் நேற்று முன்தினம் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியே இதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. பெண்ணுக்கு இருந்த வேறு தொடர்பே இந்தத் துப்பாக்கிச்சூட்டுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் படுகாயமடைந்த 32 வயது பெண் பதுளை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதுவும் இல்லாதிருந்தபோது நமக்காக முன்வந்தவரை நினைவிலிருத்துங்கள்!

## நிமல் லான்சா எம். பி.



கொழும்பு, செப். 02

**வீழ்ந்த நாட்டை பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை மீட்டெடுத்தார். அதனை நினைவில் வைத்து நன்றியுடன் இருக்க வேண்டும். அத்தியாவசிய பொருட்கள் எதுவும் இன்றி இருந்தபோது நமக்காக யார் முன்வந்தார்கள் என்பதை நினைவில் கொண்டு தேர்தலின்போது முடிவெடுங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.**

கம்பஹா - ஜா எலவில் நடந்த பிரசாரத்தின்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வீழ்ந்த நாட்டை இரண்டு ஆண்டுகளில் மீட்டவர் யார்? அவர்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நாடு வீழ்ந்தபோது அநுரவுக்கும் சஜித்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்கள் வந்தார்களா? ரணில் விக்கிரமசிங்கதான் முன்வந்தார். அதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். நினைவில் வைத்து நன்றியுடன் இருங்கள். எரிபொருள், எரிவாயு, உரம், மருந்து என எதுவுமே இல்லாமல் இருந்த போது நமக்காக யார் முன்வந் தார்கள் என்பதை நினைவுகொள்ளுங்கள்.

நாடு மீண்டும் வீழ்ந்தால் மீண்டும் பழைய நிலைக்கு செல்வதை யாராலும் தடுக்க முடியாது. சஜித்தும் அநுரவும் நாட்டைக் காப்பாற்ற முன்வரவில்லை. இன்று சுற்றுலா பயணிகள் வருகின்றனர். எரிபொருள், எரிவாயு, மருந்து நிறையவே உள்ளன. இன்று பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

கோட்டாபயவும், மகிந்த ராஜபக்ஷ குடும்பமும் நாட்டை தோல்வியடைய செய்தனர். ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்த நாட்டை இரண்டு வருடங்களில் மீட்டெடுத்தார். ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்று நாட்டைக் காப்பாற்றினார். எனவே நன்றியுணர்வுடன் இருக்கவேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது - என்றார். (ஐ)

# தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு; தமிழ் அரசு கிளைகளுக்கு வரவேற்பு



திருகோணமலை, செப். 02

இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளை தமிழ் பொது வேட்பாளர் அரியநேந்திரனுக்கு ஆதரவளித்து - சங்கு சின்னத்தை தீர்மானித்த முடிவு வரவேற்கத்தக்கது என தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளையினருடனான சந்திப்பைத் தொடர்ந்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்தப் புரட்சிகரமான முடிவால் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஊடாக அனைவரும் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும். எங்கள் ஒற்றுமையால் 22 உறுப்பினர்களை பெற்றிருந்தோம்.

சங்கு சின்னம் ஊடாக அனைத்து தமிழ் கட்சிகளும் மற்றும் சிவில் அமைப்புகளும் ஒரே குடையின் கீழ் ஒன்றிணைந்து மக்களுக்கு பலமான செய்தியை சொல்ல வேண்டும். எங்களுக்குள் பிரிவினையற்ற நிலை இல்லாது தமிழ்த் தேசியத்துக்கு அந்த பலத்தை கொண்டு செல்ல வேண்டும். பிரிவினைகள் மக்களுக்கு கோபத்தை உண்டு பண்ணும். இதனால், இருக்கின்ற 10 பிரதிநிதித்துவம் ஐந்தாகக் குறையலாம். இந்த கூட்டு தேர்தலுக்கான கூட்டாக அன்றி மக்கள் பிரச்னைகளை வெளிக் கொணரவும் போராட்டங்களை முன்னெடுக்கவுமாக இருக்க வேண்டும். திருகோணமலை மாவட்ட தமிழ் அரசு கட்சியின் முடிவால் கிளிநொச்சி மாவட்ட கட்சி கிளையும் இதே முடிவெடுத்துள்ளது - என்றார். (ஐ)

# திருக்கோணேஸ்வரத்தில் இந்து கற்றல் நிலையம்!

## நிர்மாணம் நடக்கிறது என்கிறார் ரணில்



திருகோணமலை, செப். 02

திருகோணமலை திருக்கோணேஸ்வரம் கோவிலுக்கு அருகில் "கோகுலம் மையம்" இந்து கற்றல் நிலையம் நிர்மாணிக்கப்படுகிறது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திருகோணமலையில் தெரிவித்தார்.

திருகோணமலையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நேற்று முன்தினம் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோணேஸ்வரம் என்ற பழமையான ஆலயம், தெற்கு கைலாசமாக இந்துக்களின் புனிதப் பராமரிப்பில் இருக்கிறது. அந்த ஆலயத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நான் உழைத்து வருகிறேன்.

திருகோணமலையில் உள்ள சிவில் படையினரின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்படும். திருகோணமலை துறைமுகத்தை எந்த அரசாங்கமும் அபிவிருத்தி செய்யவில்லை. இந்திய அரசாங்கத்துடன் இணைந்து திருகோணமலையை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

திருகோணமலையை அபிவிருத்தி செய்ய ஆர். சம்பந்தன் தொடர்ந்து என்னிடம் கோரிக்கைகளை முன்வைத்து வந்தார். அப்போது அவருக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவேன் - என்றார். (ஐ)

# பிரிவினையாளரின் டொலருக்காகவே 13 நடைமுறை குறித்து பேசுகிறார்கள்!

## ரணில், சஜித், அநுரவை சாடும் கம்மன்பில

கொழும்பு, செப். 02

தேர்தல் செலவினங்களுக்காக பிரிவினைவாதிகளிடமிருந்து டொலர் பெற்றுக்கொள்வதற்காகவே ரணில், சஜித், அநுர ஆகியோர் வடக்குக்கு சென்று 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாகக் கூறுகிறார்கள் என்று உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவின் தேர்தல் அறிக்கை வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

1957.04.13ஆம் திகதி தமிழ் - சிங்கள புத்தாண்டின்போது தெற்கு சிங்களவர்களை காட்டிலும் வடக்கு தமிழர்களே பெருமளவில் மகிழ்ச்சியடைந்தார்கள். வடக்கில் வாழ்ந்த தமிழர்களில் ஒரு தரப்பினருக்கு கோயிலுக்குள் சென்று கடவுளை வணங்குவதற்கு சிங்கள புத்தாண்டு தினத்தன்றே அனுமதி வழங்கப்பட்டது.


வடக்கு மக்களின் அடிப்படை பிரச்னையை மூடி மறைக்கும் செயல்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகிறது. ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் வடக்குக்கு சென்று "சிங்களவர்களின் நெருக்கடியில் இருந்து விடுதலை பெற அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக" குறிப்பிடுகிறார்கள்.

தேர்தல் செலவுகளுக்கு பிரிவினைவாதிகளிடமிருந்து டொலர் பெற்றுக்கொள்வதற்காக வடக்குக்கு சென்று இவர்கள் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக குறிப்பிடுகிறார்கள். ஆனால், வடக்கில் இன்றும் சாதிய வேற்றுமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் குறித்து இவர்கள் கவனம் செலுத்தவில்லை. சாதிய வேற்றுமையால் வடக்கில் இன்றும் ஒதுக்கப்பட்டுள்ள மக்களின் நலனுக்காக சமூக குறைப்பாடுகளை தடுக்கும் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துவோம்.

வடக்கில் உள்ளவர்கள் தெற்கில் வாழ்கிறார்கள், தெற்கில் உள்ளவர்கள் வடக்கில் வாழ்கிறார்கள். தமிழ் மற்றும் சிங்கள இனத்தவர்கள் திருமண பந்தத்தில் இணைந்துகொண்டுள்ளார்கள். இதனை காட்டிலும் நல்லிணக்கம் அவசியமா? உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபித்ததால் நாட்டில் மீண்டும் இரத்த வெள்ளம் ஓடும் நிலை ஏற்படும் -என்றார். (ஐ)

# இராணுவத்தை குற்றவாளிகளாக்கவே நல்லிணக்க சட்டம் இயற்றப்பட்டதாம்

## விமல் வீரவன்ஸ சொல்கிறார்



கொழும்பு, செப். 02

யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திய இராணுவத்தினரை குற்றவாளி கூண்டில் ஏற்றுவதற்காக உண்மை மற்றும் நல்லிணக்க சட்டம் இயற்றப்பட்டுள்ளது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

திலித் ஜயவீரவை ஆதரித்து பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க சட்டமூலம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 7 சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திய இராணுவத்தினரை குற்றவாளி கூண்டில் ஏற்றும் சட்டம் இலங்கையில்தான் முதன்முறையாக இயற்றப்பட்டுள்ளது. உலகில் எந்த நாடுகளிலும் இவ்வாறான சட்டங்கள் இயற்றப்படவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் "இனம் மற்றும் மத அடிப்படை வாதங்களை முன்னிலைப்படுத்தி தோற்றம் பெறும் முரண்பாடுகளை விசாரணை செய்வதற்கு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயல்பாடுகளை விரிவுப் படுத்தல்" என ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸவுக்கு அப்பாற்பட்டு அநுரகுமார திஸாநாயக்க சென்றுள்ளார். இடதுசாரி லிபரல்வாதிகளின் நிலைப்பாடு இன்று இவ்வாறு மாற்றமடைந்துள்ளது.

இலங்கையின் சுயாதீனம் மற்றும் இறையாண்மை இன்றும் அச்சுறுத்தல் நிலையில் காணப்படுகிறது எனவே மக்கள் [illegible] எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் இலங்கையுடனேயே; ரணிலுடன் அல்ல!

## அநுரகுமார திஸநாயக்க

கொழும்பு, செப். 02

சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடனேயே ஒப்பந்தம் செய்துள்ளதே தவிர, ரணில் விக்கிரமசிங்கவுடன் அல்ல. எனவே, தாம் இல்லை என்றால் நாடு மீண்டும் பாதாளத்துக்கு சென்றுவிடும் என ரணில் கூறுவது முற்றிலும் பொய் - என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு - கல்கிசையில் நடந்த பரப்புரை கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போது ஆட்சியாளர்கள் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள விரும்புகின்றார்களே தவிர, புதிய வர்த்தகங்களை உருவாக்குவதற்கு விரும்பவில்லை.

விருப்பமான இடங்களில் வணிகங்களை ஆரம்பிப்பதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உதவி செய்யும். நாம் அரசாங்கத்தை மாற்றுவதற்கு மாறாக இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்கே வாய்ப்புக் கோருகிறோம்.

சர்வதேச நாணய நிதியம் ரணிலுடன் எந்த ஒப்பந்தங்களையும் செய்யவில்லை. அதன் ஒப்பந்தங்கள் அனைத்தும் இலங்கை அரசுடனே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. எனவே, தாம் இல்லை என்றால் நாடு மீண்டும் பாதாளத்துக்கு சென்றுவிடும் என ரணில் கூறுவது முற்றிலும் பொய்யான கருத்தாகும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வெசும நிவாரண திட்டம் 6 மாதங்களில் புதுப்பிக்கப்படும்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, செப். 02

**அஸ்வெசும நிவாரணம் அறு மாதங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட்டு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

பண்டாரவளையில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், நிவாரணம் கிடைக்கப் பெறாதவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்காக அஸ்வெசும நிவாரணம் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட்டு வழங்கப்படும்.

சிலர் வரிகளைக் குறைப்பதாகக் கூறுகின்றனர். அவ்வாறு செய்வதால் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் அனைத்து நிதிகளும் நிறுத்தப்படும். அதன் பின்னர் நாடு 2022ஆம் ஆண்டை விடவும் மோசமான நிலைக்குச் செல்ல நேரிடும்.

இதேநேரம், எல்ல மற்றும் பண்டாரவளையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், சுற்றுலா பயணிகளால் நிரம்பி வழியும் பிரதேசமாக பண்டாரவளையை மாற்றுவதற்கான திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார். (ஐ)



# தேர்தலில் அநுரகுமாரவுக்கு 60 வீத வாக்குகள் கிடைக்கும்

## ஜே. வி. பி. சொல்கிறது

கொழும்பு, செப். 02

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸநாயக்க 60 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டுவார் என்று ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அடுத்த சில நாட்களில் இந்த வாக்கு வீதம் அதிகரிக்கும். கருத்துக் கணிப்புகளை விடவும் வாக்கு வீதம் அதிகமாக கிடைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

"இம்முறை ஜனாதிபதித் தேர்தல் என்பது பல பிரிவினருக்கான போட்டி அல்ல. திருடர்களுக்கும் நல்லவர்களுக்குமான போட்டியாகும்.

மக்கள் தமது தெரிவை சரியாகச் செய்யும் வாய்ப்பும் கிடைத்துள்ளது. சஜித் மற்றும் ரணிலின் மேடையில் இருப்பவர்கள் ஊழல்வாதிகள். அதனால் தான் அங்கும் இங்கும் மாறிக்கொண்டு இருக்கின்றனர்.

அவர்களுக்கென கட்சி இல்லை. கொள்கை இல்லை. எஞ்சியுள்ளது தேசிய மக்கள் சக்தி மாத்திரமே. அதனால் மக்கள் இலகுவாக தமது தெரிவை மேற்கொள்ள முடியும். அநுர 60 வீத வாக்குகளை பெறுவார். எதிர்காத்தில் இந்த வீதம் இன்னும் அதிகரிக்கும் - என்றார்.

# பொது வேட்பாளரை ஆதரிப்பது நல்லிணக்கத்தை பாதிக்குமாம்!

## மொட்டுக் கட்சி சொல்கிறது



கொழும்பு, செப். 02

தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவளிப்பது நல்லிணக்க முயற்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வட மாகாணத்துக்கான மத்திய குழு உறுப்பினர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் செய்தியாளர்களுக்கு கருத்துவெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்கும்போது கொள்கைகள், தகுதிகள் குறித்தே கவனம் செலுத்தவேண்டும். இன அடிப்படையில் அதனை ஆராயக்கூடாது. இனத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் தமிழர்களின் நோக்கம் குறிக்கோள் பாதிக்கப்படும். தேசிய நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படலாம். தமிழ் அரசியல் வாதிகள் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளவேண்டும். இதனால் ஏற்படக்கூடிய எதிர்மறையான விளைவுகளுக்கு தென் பகுதியை குற்றம்சாட்டக்கூடாது - என்றும் கூறினார். (ஐ)

# கட்சி மாறும் முறையை நாம் தடை செய்வோம்

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித்

கொழும்பு, செப். 02

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும் - ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக கட்சி மாறும் முறையை தடை செய்வோம் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நடந்த பரப்புரை கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இனவாதத்தால் முழு நாடும் சீரழிந்து போனது. இனவாதத்தையும் மதவாதத்தையும் - இன, மத பேதங்களையும் ஊக்குவிக்கின்ற யுகத்தை இல்லாமல் செய்வோம்.

அனைத்து இன மக்களும் இந்த மோசமான அரசாங்கத்தால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற - வேதனையான நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் துன்பத்தைத் துறந்து கண்ணீரைத் துடைத்து சுபீட்சமான வாழ்க்கையை உருவாக்குகின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன்.

வீடில்லாத மக்களுக்கு வீடுகள் வழங்கப்படும். கிராமத்தையும் பின்னர் நகரத்தையும் பின்னர் நாட்டையும் அபிவிருத்தி அடையச் செய்யும் கொள்கை திட்டத்துடனே நாம் செல்கிறோம். காணியில்லாத வீடில்லாத மக்களுக்கு காணிகளை



வழங்கி, வீடுகளை அமைத்துக் கொடுத்து கம்உதாவ திட்டத்தை நடைமுறைப்படுத்துவேன்.

வறுமை ஒழிப்பு வேலை திட்டம்.

வறுமையை ஒழிப்பதற்கான புதிய வேலை திட்டத்தை முன்னெடுப்பதோடு, 24 மாதங்களுக்கு ரூபா 20 ஆயிரம் வீதம் வழங்கி 24 மாதங்களுக்குள் வறுமையை ஒழிக்கின்ற வேலைத் திட்டத்தை முன்னெடுப்போம். தொடர்ந்தும் நிவாரணங்களைப் பெற்று அதிலேயே தங்கி வாழாத ஒரு பரம்பரையை உருவாக்க நடவடிக்கை எடுப்போம் - என்றார். (ஐ)

# நல்லூர் திருவிழாவை மதித்து யாழில் பிரசாரம் செய்யவில்லை!

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, செப். 02

நல்லூர் ஆலய திருவிழா முடிவடையும்வரை யாழ்ப்பாணத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என தீர்மானித்தேன். யாழ்ப்பாணத் தினதும் நல்லூர் ஆலயத்தினதும் கலாசார முக்கியத்துவத்தை கருதியே இவ்வாறு தீர்மானித்தேன் என்று ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



புனிதமான தருணங்களில் பாரம்பரியங்களை பேணுவது அவசியம் என நான் கருதுகின்றேன். இதனாலேயே நல்லூர் தேர்த் திருவிழாவரை யாழ்ப்பாணத்தில் பிரசாரத்தை நிறுத்தத் தீர்மானித்தேன் என்று நேற்று முன்தினம் நாமல் ராஜபக்ஷ செய்தியாளர்களிடம் கூறினார்.

இதேவேளை, இன்றுடன் நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா நிறைவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேர்தலில் ரணிலின் வெற்றி காலத்தின் கட்டாயமாகும்!

## ராமேஷ்வரன் எம். பி.

நுவரெலியா, செப். 02

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற வேண்டியது காலத்தின் கட்டாய தேவையென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து கொட்டகலையில் நடந்த பிரசார கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், சிலவேளை ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்தால் முழு நாடும் தோல்வியடையும். மீண்டும் வரிசை யுகம் உருவாகும். எனவே, மலையக மக்கள் உட்பட ஒட்டு மொத்த நாட்டு மக்களும், நாட்டின் நலன்கருதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற வைக்க வேண்டும்.

எமது மக்களின் அமோக ஆதரவுடன் நானும், எமது பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமானும் பாரா



ளுமன்றத்துக்கு தெரிவானோம். அவ்வாறு தெரிவானதன்மூலம் நெருக்கடியான காலகட்டத்தில் கூட எமது மக்களுக்கு சேவை யாற்ற முடிந்தது.

எமது பொதுச்செயலாளர் அமைச்சரான பின்னர் குறுகிய காலப்பகுதிக்குள் மலையகத்துக்கும், முழு நாட்டுக்கும் பல சேவைகளை செய்யக்கூடியதாக இருந்தன.

ரணில் விக்கிரமசிங்க இந் நாட்டை ஆள வேண்டியது கட்டாய தேவையாகும். இன்னும் ஐந்தாண்டுகளுக்கு அவரின் தலைமைத்துவம் இருந்தால் இந்நாடு நிச்சயம் முன்னேறும். சிலவேளை ரணில் விக்கிரம சிங்க தோற்றால் அது தனிமனிதனுக்குரிய தோல்வி அல்ல, நாட்டின் தோல்வியாகும். அது மட்டுமல்ல மீண்டும் வரிசையுகம் உருவாகும் - என்றார். (ஐ)

# ஜனாதிபதி மாளிகை பல்கலையாக மாறும்!

## சஜித் தரப்பு பிரசாரம்

கொழும்பு, செப். 02

தனது தலைமையில் அரசு வந்தால் கொழும்பில் இருக்கும் மிக ஆடம்பர மாளிகையான ஜனாதிபதி மாளிகையை பல்கலைக்கழகமாக மாற்றுவேன் என்கின்ற நல்லெண்ணத்துடன் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ இருக்கிறார் என்று எச். எம். எம். ஹரீஸ் எம். பி. கூறியுள்ளார்.

அம்பாறை - பொத்துவிலில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத் திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "பொய் கூறி தெரிகின்ற முகுது மகா விகாரை வர்த்தமானி விவகாரம் நூற்றுக்கு 200 வீதம் பொய் -பொத்துவிலில் மண்ணை சிறைப்பிடித்து விட்டு நம் மண்ணில் பொய் கூறி திரிகின்றார்கள் - எல்லா பிரச்னைகளுக்கும் தீர்வை சஜித் ஜனாதிபதியானதும் பெற்றுத்தருவார் - என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கறுப்புப் பட்டி அணிந்து பட்டதாரிகள் போராட்டம்

காரைதீவு, செப். 02

**அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் வேலை வாய்ப்பு கோரி கறுப்புப் பட்டி அணிந்து கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுத்தனர்.**

இந்தப் போராட்டமானது காரைதீவு சந்திக்கு அருகாமையில் நடைபெற்றது. பட்டதாரிகள் கறுப்புப் பட்டி அணிந்து பல்வேறு சுலோகங்களை ஏந்தி கொளுத்தும் வெயிலில் கவனயீர்ப்புப் போராட்டத்தை அமைதியாக முன்னெடுத்தனர்.

இதன்போது, வேலை வாய்ப்பு தொடர்பில் எந்தவொரு தகவலும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் உடனடியாக ஜனாதிபதி வேட்பாளர்கள் எனக் கூறிக்கொள்வோர் வெளிப்படையாக பட்டதாரிகளின் நிலைமை குறித்து தகவல்களை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டமானது அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் உதுமாலெப்பை முகமது முஹ்சீன் தலைமையில் நடைபெற்றதுடன் அந்தச் சங்கத்தின் செயலாளர் அப்துல் வஹாப் முப்லிஹ் அகமட் உட்பட குறித்த போராட்டத்துக்கு ஆதரவாக ஏனைய வேலையற்ற பட்டதாரிகளும் பங்கேற்றனர். "அழிக்காதே அழிக்காதே எதிர்காலத்தை அழிக்காதே", "பட்டதாரிகள் வீதிகளில் நின்றால் நாடு முன்னேறுவது எவ்வாறு?, பட்டதாரிகள் எப்போதும் வீதிக்கு வருவது ஏன்?" போன்ற பதாகைகளை தாங்கியவாறு தமது தொழில் உரிமையை வலியுறுத்தும் வகையிலான பல்வேறு கோசங்களையும் எழுப்பி உரிய தரப்பினர் தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர். (எ)

# இரத்ததான முகாம்

பொத்துவில், செப். 02

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலம் மற்றும் பொத்துவில் இரத்ததானம் வழங்குவோர் ஒன்றியமும் இணைந்து இரத்ததான முகாமை நேற்று ஆதார மருத்துவமனையில் ஏற்பாடு செய்திருந்தன.

"இரத்தக்கொடை வழங்கி உயிர்களைக் காப்போம்" எனும் தொனிப் பொருளில் நடைபெற்ற இந்த இரத்ததான முகாமில் சுகாதார வைத்திய அதிகாரி, மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், விசேட அதிரடிப் படையினர், இளைஞர் - யுவதிகள், விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள், சமூக சேவையாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)









# வாலவிக்னேஸ்வரர் ஆலய வருடாந்த பால்குடபவனி

காரைதீவு, செப். 02

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் ஓரங்கமான பால்குடபவனி நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (எ)

# "எல்லாத் துறைகளிலும் பெண்கள் திறமைகளை பறைசாற்ற வேண்டும்"

கல்முனை, செப். 02

இன்றைய சூழலில் பெண்கள் தங்கள் திறமைகளை எல்லாத் துறைகளிலும் முன்னிலைப்படுத்தி வருகின்றனர். திறமைகளை அடையாளப்படுத்துவதில் பெண்கள் காட்டிவரும் அர்ப்பணிப்பானது பாராட்டத்தக்கது. தங்களது மார்க்க விழுமியங்களில் பிசகாது பெண்கள் எந்தத் துறையிலும் முன்னேற முடியும் என்று தென்கிழக்கு பல்கலைக்கழக பதில் உபவேந்தர் கலாநிதி யூ. எல். அப்துல் மஜீத் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் தமிழ்ச் சங்கம் மற்றும் சமூகவியல் சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த புத்தளம் புழுதிவயல் பைஸானா பைரூஸ் எழுதிய 20 பிளஸ் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு, கலை கலாசார பீடத்தின் கேட்போர் கூடத்தில் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம். எம். பாஸில் தலைமையில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போது தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மட்டுமல்லாது ஏனைய நிறுவனங்களிலும் பெண்களின் பங்கேற்பு அதிகரித்து வருகின்றது. இவர்கள் பல்வேறு துறைகளில் தங்களது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றனர் என்றும் அவர் கூறினார். (எ)

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய பெருந்திருவிழா

கொக்கட்டிச்சோலை, செப்.02

வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் 4 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை, 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.

மறுநாள் 23ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. என்று ஆலய பரிபாலன சபையின் தலைவர் இ. மேகராசா தெரிவித்தார். (எ)

# 3 மாணவிகள் முதலிடம் பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு

சம்மாந்துறை, செப். 02

கிழக்கு மாகாண மட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவிகள் மூவர் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண மட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகள் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தலைமையில் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.

இதில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் மூன்று போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பிரிவு - 3 பேச்சுப் போட்டியில் எம். எப். ஸுஹா முதலாம் இடத்தையும், பிரிவு - 4 கட்டுரை ஆக்கப் போட்டியில் எச். எம். எப். பஹீஜா முதலாம் இடத்தையும், பிரிவு - 5 இலக்கிய விமர்சனப் போட்டியில் என். ஏ. லியா திஹான் முதலாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் 3 நாள் போர் நிறுத்தம்!

## போலியோ தடுப்பு முகாமுக்கு இஸ்ரேல் இராணுவம் இணக்கம்



டெல் அவிவ், செப். 02

**போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட காஸாவில் மூன்று நாட்கள் போர் இடைநிறுத்தத்துக்கு இஸ்ரேல் இராணுவம் மற்றும் ஹமாஸ் அமைப்பு சம்மதம் தெரிவித்துள்ளது. குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுப்பதை யொட்டி மூன்று நாட்கள் மட்டும் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் காஸாவில் போலியோ நோய் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்போது, போர் காரணமாக தடுப்பூசி விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் மனிதாபிமானத்தின் அடிப்படையில் போர் நிறுத்தத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்று ஐ. நா. சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து, பல்வேறு பகுதிகளில் மூன்று நாட்கள் போர் நிறுத்தம் செய்ய ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் என இரு தரப்பும் சம்மதம் தெரிவித்துள்ளன.

முதலில் மத்திய காஸா பகுதி, பின்னர் தெற்கு காஸா, அதன் பிறகு வடக்கு காஸா என போலியோ சொட்டு மருந்துகள் வழங்கப்படும். இந்த மூன்று நாட்களில் காஸா பகுதி முழுவதும் சுமார் 6 இலட்சத்து 40 ஆயிரம் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்தை ஐ. நா. சுகாதார ஊழியர்கள் மற்றும் பிற உள்ளூர் சுகாதார ஊழியர்கள் செலுத்துவார்கள். போலியோ சொட்டு மருந்து கொடுக்க 2,000இற்கும் மேற்பட்டவர்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

காஸாவில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக போர் நடந்து வருகிறது. காஸா மீதான இஸ்ரேலின் போரில் 40 ஆயிரத்து 602 பேர் உயிரிழந்தனர். 93 ஆயிரத்து 855 பேர் காயமடைந்துள்ளனர்.

காஸாவில் போர் தொடங்கியதிலிருந்து பல இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இந்த மக்களுக்கு அடிப்படை தேவைகளான உணவு, குடிநீர், மருந்துகள் உள்ளிட்டவை கிடைக்காமல் தவித்து வருகின்றனர். எனவே, தொற்று நோய்கள் அதிகரித்த வண்ணமுள்ளது. அதேவேளை, காஸா குழந்தைகளிடையே நோய் பரவல் அதிகரித்துள்ளதாகவும் திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# போலியோ முகாமுக்கு முன்னர் காஸாமீது இஸ்ரேல் தாக்குதல்

## 49 பேர் உயிரிழந்தனர்

நோக்லாக், செப். 02

போலியோ தடுப்பு முகாமுக்கு முன்னர் காஸாமீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 49 பேர் பலியாகினர்.

காஸாவில் பயங்கரவாதிகளை தாக்கி, அவர்களுடைய இராணுவ உட்கட்டமைப்பை தகர்த்தோம் என்று இந்தத் தாக்குதல் குறித்து இஸ்ரேல் படையினர் விளக்கமளித்துள்ளனர்.

போலியோ தடுப்பு முகாம் அதிகாரபூர்வமாகச் செயல்படத் தொடங்குவதற்கு முன்னர், நாசர் மருத்துவமனை விடுதிகளில் அடையாள முகாம் நடத்தி, சில குழந்தைகளுக்கு மருத்துவ அதிகாரிகள் போலியோ மருந்து வழங்கினர். இந்த நிலையில், காஸாவில் இஸ்ரேல் படையினர் திடீர் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவ மற்றும் சமூக நலப் பணியாளர்கள் முகாமுக்கு தயாரான நிலையில், காஸா முனைப்பகுதியில் அகதிகள் முகாம்களில் ஒன்றான நசீரத் பகுதியில் நடந்த வான்வழித் தாக்குதலில் 19 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 9 பேர் ஒரே குடும்பத்தினர்.

இதேவேளை, காஸாவில் அடுத்தடுத்து நடந்த தொடர் தாக்குதல்களில் 49 பேர் உயிரிழந்தனர். (எ)

# வன விலங்குகளை கொல்ல நமீபியா அரசாங்கம் திட்டம்

விண்ட்ஹோக், செப். 02


தென்னாபிரிக்க நாடுகளில் ஒன்றான நமீபியாவில் நிலவும் கடும் வறட்சியால், உணவுக்காக காட்டு விலங்குகளை கொல்வதற்கு திட்டமிட்டுள்ளதாக அந்த நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நமீபியாவில் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடும் வறட்சி நிலவுகிறது. பசி, பட்டினி அதிகரித்துள்ள நிலையில், பசியால் வாடும் 14 இலட்சம் மக்களுக்கு உணவளிக்க காட்டில் வாழும் வனவிலங்குகளை வேட்டையாடி அவற்றின் இறைச்சியை உணவாகப் பயன்படுத்த அந்த நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.

அந்த வகையில் 83 யானைகள் உட்பட 723 காட்டு விலங்குகளை கொல்ல நமீபியா அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

தென்னாபிரிக்க நாடுகளில் உலகின் மிகப்பெரிய சவன்னா யானைகள் உள்ளன. இவை அழிந்து வரும் பட்டியலில் உள்ளன.

கடந்த மூன்று தலைமுறைகளில் அவற்றின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துள்ளது. ஆனால் சமீப ஆண்டுகளில், 2022 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, யானைகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 27, 000 இற்கும் அதிகம் என்று தெரிய வந்துள்ளது. (எ)



# வெள்ளத்தில் சிக்கி 59 பேர் உயிரிழப்பு

டாக்கா, செப். 02

பங்களாதேஷில் ஏற்பட்ட பெரு வெள்ளப்பெருக்கில் சிக்கி 59 பேர் உயிரிழந்தனர்.

பங்களாதேஷில் கடந்த இரு வாரங்களாக பெய்து வரும் பருவமழையால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதில், வீடுகள், கட்டடங்களை வெள்ளம் சூழ்ந்தது. மின் விநியோகம், வீதி இணைப்பு துண்டிப்பு, போக்குவரத்து பாதிப்பு உள்ளிட்டவற்றால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

வெள்ளத்தில், சிக்கி 59 பேர் பலியாகினர். இதில் பெனி மாவட்டத்தில் 23 பேரும், கமில்லா மாவட்டத்தில் 14 பேரும் உயிரிழந்தனர். 11 மாவட்டங்களில் உள்ள நகராட்சி பகுதிகள் உட்பட பல்வேறு இடங்களிலும் 54 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகினர்.

40 இலட்சம் பேர் வரை 3,900 இற்கும் மேற்பட்ட நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு, குடிநீர் மற்றும் மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தொற்று நோய் பரவக் கூடிய ஆபத்து நிலவுவதால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். (எ)

# இந்தியாவில் தீவிரவாத படையை உருவாக்க சதி!

## என். ஐ. ஏ. தீவிர விசாரணை

புதுடில்லி, செப். 02

இந்தியாவில் முஸ்லிம் தீவிரவாத படையை உருவாக்கச் சதித்திட்டம் தீட்டிய குற்றத்துக்காக அஜீஸ் அகமது என்கிற நபர் தேசிய புலனாய்வு முகமை (என். ஐ. ஏ.) அதிகாரிகளால் பெங்களூருவில் வைத்து கைது செய்யப்பட்டார்.

அஜீஸ் அகமது என்கிற ஜலீல் அஜீஸ் அகமது விமானத்தில் தப்பியோட முயன்றபோது பெங்களூருவில் கைது செய்யப்பட்டார். உலகம் முழுவதும் தடை செய்யப்பட்ட ஹிஸ்புத் தஹ்ரீர் அமைப்பின் தீவிர அடிப்படைவாத கொள்கையின் தாக்கத்தில் செயல்பட்டு வரும் 6 தீவிரவாதிகளை தேசிய புலனாய்வு முகமை சில நாட்களாக தேடி வருகிறது. தாக்கி அல் தின் அல் நபனி என்கிற முஸ்லிம் அடிப்படைவாதியின் சித்தாந்தத்தைப் பின்பற்றி உலகெங்கிலும் இஸ்லாமிய தீவிரவாதத்தை நிலைநாட்டுவதே இந்த அமைப்பின் நோக்கமாகும்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்டிருக்கும் நபர் பல இளைஞர்களை மூளைச்சலவை செய்து தடை செய்யப்பட்ட இயக்கத்தில் சேர்த்துள்ளதாகவும், "இஸ்லாமிக் கிலாபத்" என்கிற முஸ்லிம் கிளர்ச்சியாளர்களை இந்தியாவில் உருவாக்கும் நோக்கத்துடன் தீவிரவாத கொள்கையை பரப்பி வந்ததாகவும் என். ஐ. ஏ. அதிகாரிகள் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ)

# ரஷ்யாவில் 22 பேருடன் ஹெலிகொப்டர் மாயம்

மொஸ்கோ, செப். 02

ரஷ்யாவில் 19 பயணிகள் உட்பட 22 பேருடன் பயணித்த மி - 8 ரகத்தை சேர்ந்த ஹெலிகொப்டர் மாயமானது.

ரஷ்யாவின் தொலை தூர கிழக்குப் பகுதியிலுள்ள கம்சட்கா தீபகற்ப பகுதியில் பறந்து கொண்டிருந்த போது, இந்த ஹெலிகொப்டர் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது.

மாயமான ஹெலிகொப்டரை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# 1,000 இற்கும் அதிகமானோர் வன்முறைகளால் மரணம்!

## பங்களாதேஷ் சுகாதார அமைச்சு

டாக்கா, செப். 02

பங்களாதேஷில் கடந்த ஜூலை மாதம் முதல் அரசாங்கத்துக்கு எதிராக இடம்பெற்ற போராட்டங்களின்போது ஏற்பட்ட வன்முறைகளில் சிக்கி 1,000இற்கும் அதிகமானோர் உயிரிழந்ததாக அந்த நாட்டு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

போராட்டங்களின் போது ஏற்பட்ட வன்முறைகளில் 1,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மற்றும் 400 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கண்பார்வையை இழந்துள்ளனர் என இடைக்கால சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலருக்கு ஒரு கண்ணிலும், இரண்டு கண்களிலும் பார்வை பறிபோயிட்டது. அத்தோடு, பலருக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளதோடு, கால்களும் துண்டிக்கப்பட்டுள்ளன என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதனம் இம்மாதமும் அதிகரிக்காது!

## பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம்

கொழும்பு, செப். 02

**பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபாய் என்ற நாளாந்த வேதனத்தின் அடிப்படையில் செப்ரெம்பர் மாதத்துக்கான வேதனம் வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளன தரப்பினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை 1,700 ரூபாயாக அதிகரித்து கடந்த ஒகஸ்ட் 13ஆம் திகதி மீண்டுமொரு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இதன்படி நாளாந்த அடிப்படை வேதனமாக ஆயிரத்து 350 ரூபாயும், உற்பத்தி அடிப்படையிலான ஊக்குவிப்பு கொடுப்பனவாக 350 ரூபாயுமாக 1,700 ரூபாய் வழங்கப்பட வேண்டும்.

குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏதேனும் ஆட்சேபனைகள் காணப்படுமாயின், அதனைச் சமர்ப்பிப்பதற்குக் கடந்த 28 ஆம் திகதி மதியம் 12 மணி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை 1,700 ரூபாயாக அதிகரித்து ஏலவே வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது. இதனையடுத்து குறித்த வர்த்தமானி அறிவித்தல் மீளப் பெறப்பட்டதுடன் வேதன நிர்ணய சபையில் கடந்த ஒகஸ்ட் 12 ஆம் திகதி எட்டப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இந்தப் புதிய வர்த்தமானி வெளியிடப்பட்டது.

எனினும், குறித்த வேதனத்தின் அடிப்படையில் இந்த மாதத்துக்கான வேதனத்தை வழங்குவதற்கான ஒழுங்குமுறைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனவும் 350 ரூபாய் என்ற உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு தொடர்பில் இதுவரை இணக்கம் எட்டப்படவில்லை எனவும் பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளன தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் நாளாந்தம் 1,700 ரூபாய் வேதனத்தை வழங்குவதற்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் இணங்கியுள்ளன என்றும் வேதன நிர்ணய சபையில் நடந்த அதற்கான வாக்கெடுப்பில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் முதல்முறையாக அந்த யோசனைக்கு ஆதரவாக வாக்களித்ததாகவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் உள்ளிட்ட பலர் கூறியிருந்தனர்.

எனினும், ஆயிரத்து 350 ரூபாய் என்ற அடிப்படை வேதனத்துக்கு மாத்திரமே தாங்கள் இணங்கி இருப்பதாகவும், மேலதிக கொழுந்துக்கான விலையைத் தவிர வேறெந்த கொடுப்பனவுகளுக்கும் தாங்கள் இணங்கவில்லை எனவும் பெருந்தோட்ட நிறுவனங்கள் தரப்பில் முன்னதாக தெரிவிக்கப்பட்டது.

எனவே, இந்த மாதத்துக்கான வேதனம் நாளாந்தம் ஆயிரம் ரூபாய் என்ற பழைய தொகையின் அடிப்படையிலேயே கணிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதனம் குறித்துக் கலந்துரையாடுவதற்காக நாளை செவ்வாய்க்கிழமை வேதன நிர்ணய சபை மீண்டும் கூடவுள்ளதாக பெருந்தோட்ட நிறுவன சம்மேளன தரப்பினர் தெரிவித்தனர். (ஐ)

# போதைப்பொருள் குற்றம் 702 சந்தேகநபர்கள் கைது!

நாடளாவிய ரீதியில் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையில் போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 702 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 692 ஆண்களும் 10 பெண்களும் அடங்குவர். கைதானவர்களில் 11 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். போதைப்பொருட்களுக்கு அடிமையான 3 பேரை புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 182 கிராம் 96 மில்லி கிராம் ஹெரோயின், 312 கிராம் 658 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 991 கிராம் 638 மில்லி கிராம் கஞ்சா ஆகிய போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மனைவியை மிரட்ட மகளை சித்திரவதை செய்தவர் கைது

கொழும்பு, செப். 02

தனது ஐந்து வயது மகளை தாக்கி சித்திரவதை செய்து அதனைக் காணொலிகளாக பதிவு செய்த தந்தையை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாத்தறை - தெனியாய பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

சந்தேக நபரின் மனைவி வெளிநாட்டில் பணிபுரிகிறார். இந்த நிலையில் தனக்கு அதிக பணம் வேண்டும் என்றும் மனைவியின் பெற்றோருக்கு அனுப்பும் பணத்தைத் தனது வங்கிக் கணக்குக்கு அனுப்புமாறும் கூறியே தனது மகளை சித்திரவதை செய்து காணொலிகளாக பதிவு செய்து அதனை மனைவிக்கு அனுப்பியுள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபரின் மனைவி இது தொடர்பில் தனது பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். அவர்கள், பொலிஸாருக்கு அளித்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# தேர்தல் அறிக்கையை தபால்மூலம் இலவசமாக விநியோகிக்க வாய்ப்பு

## தேர்தல்கள் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, செப். 02

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வாக்காளர்களுக்கு இலவசமாக அஞ்சல் மூலம் விநியோகிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தின்படி வேட்பாளர் ஒருவர் இத்தகைய தேர்தல் விஞ்ஞாபனம் அல்லது கொள்கை அறிக்கையை வாக்காளர்களுக்கு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் வாக்காளருக்கு ஒரேயொரு விஞ்ஞாபனத்தை மாத்திரமே விநியோகிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ரணில், மஸ்தானின் பதாதைகள் அகற்றம்

வவுனியா, செப். 02

வவுனியாவில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் பதாதைகள் பொலிஸாரால் நேற்று அகற்றப்பட்டன.

வவுனியாவில் தேர்தல் பிரசார கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்காக ரணில் விக்கிரமசிங்க வவுனியாவுக்கு வருகை தந்திருந்தார்.

இந் நிலையில் வவுனியா நகரப்பகுதிகளில் ரணில் மற்றும் இராஜாங்க அமைச்சர் காதர்மஸ்தான் ஆகியோரின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்த பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்தப் பதாதைகள் ஜனாதிபதி ரணில் வருகை தருவதற்கு முன்பு பொலிஸாரால் அகற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மின்சாரம் தாக்கி யானை உயிரிழப்பு

கொழும்பு, செப். 02

மாத்தளை, யடவத்தை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தலுபோதவத்தை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் மின்சாரம் தாக்கி காட்டு யானை ஒன்று உயிரிழந்ததாக மஹவெல பொலிஸார் தெரிவித்தனர்.

25 முதல் 30 வயது மதிக்கத்தக்க யானை ஒன்றே இவ்வாறு உயிரிழந்தார். மிருகங்களை வேட்டையாடுவதற்காகப் பொருத்தப்பட்டிருந்த மின்கம்பியில் சிக்கியே யானை உயிரிழந்தது.

இதனையடுத்து, குறித்த காணியின் உரிமையாளர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓட்டோ, பஸ் கட்டணம் குறைக்கப்படமாட்டாது

கொழும்பு, செப். 02

எரிபொருட்களின் விலையை குறைத்தாலும் பேருந்து, ஓட்டோ கட்டணங்கள் குறையாது என்று அறிவிக்கப்பட்டுள்ளன.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள் விலை குறைப்பு நடைமுறைக்கு வந்தது.

எனினும், இந்த விலை குறைப்பு பயணக் கட்டணங்களை திருத்தியமைக்கும் அளவுக்கு குறைக்கப்படவில்லை என்று பேருந்து உரிமையாளர்கள் சங்கமும் ஓட்டோ உரிமையாளர் சங்கங்களும் தெரிவித்துள்ளன. (ஐ)

# மோகனதாஸ் சுவாமிகளின் பவளவிழா கொண்டாட்டம்!



வடமராட்சி, செப். 02

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளின் 75ஆவது பிறந்தநாள் பவளவிழா நேற்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சந்நிதியான் கலை, பண்பாட்டு பேரவையின் ஒழுங்கமைப்பில் நடந்த இந்த நிகழ்வில் நல்லையாதீன குரு முதல்வர் சிறிஸ்ரீ சோமசுந்தர ஞான தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், கோப்பாய் ஆசிரியர் கலாச்சாலையின் அதிபர் ச. லலீசன், யாழ். பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதியர் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் வடக்கு - கிழக்கு மற்றும் மலையக பிரதேசங்களில் இருந்து சந்நிதியான் ஆச்சிரமத்தின் மூலம் நன்மை பெற்று வரும் மாணவர்கள், அவர்களின் பெற்றோரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகள், நூல் வெளியீடு என்பனவும் நடைபெற்றன. (ஐ-02)

# ராஜிதவுக்கு எதிராக ஜே. வி. பி முறைப்பாடு

கொழும்பு, செப். 02

அநுரகுமார திஸநாயக்கவுக்கு வாக்களிப்பதற்காக வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கை தொழிலாளர்கள் வருவதைத் தடுக்கும் நோக்கில் கருத்து வெளியிட்டமைக்காக முன்னாள் அமைச்சர் ராஜித சேனரத்னவுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ராஜித ரணிலுக்கு ஆதரவாக பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

இந்தப் பின்னணியிலேயே வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் தமது கிராமங்களுக்கு வருகை தந்து அநுரகுமார திஸநாயக்கவுக்கு வாக்களிப்பதை தடுக்க முற்படுவதாக தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தேர்தல் செயலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)

# எரிவாயுவின் விலையில் திருத்தம் செய்யப்படாது!

கொழும்பு, செப். 02

செப்ரெம்பர் மாதத்துக்கான உள்நாட்டு எரிவாயுவின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படாது என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தை லிட்ரோ எரிவாயு நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டது. அதன்பிறகு எரிவாயு விலை குறைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

பகிரங்கமான ஆதரவை அறிவித்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரான மாவை சோ. சேனாதிராசா மற்றும் சி. சிறீதரன் ஆகியோர் பங்கேற்றிருக்கவில்லை. சேனாதிராசா சுகயீனம் காரணமாகவும் சிறீதரன் வெளிநாடு சென்றிருப்பதாலும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்றும் அறிய வருகின்றது.

இதனிடையே, தமிழ் அரசுக் கடசியின் திருகோணமலை, கிளிநொச்சி மாவட்ட கிளைகள் தீர்மானம் இயற்றியிருந்தன என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## வல்லிபுர...

தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறும் பெருந்திருவிழாவில் 12ஆம் திகதி பாம்புத் திருவிழாவும் மறுநாள் 13ஆம் திகதி கம்சன் திருவிழாவும் அடுத்தநாள் 14ஆம் திகதி வேட்டை திருவிழாவும் நடைபெறும்.

தொடர்ந்து, 15ஆம் திகதி சப்பை ரதத் திருவிழாவும் மறுநாள் 16ஆம் திகதி தேர்த் திருவிழாவும் அடுத்தநாளான 17ஆம் திகதி சமுத்திர தீர்த்தமும் 18ஆம் திகதி கேணித் தீர்த்தமும் நடைபெறவுள்ளன.

சைவ சமய முறைப்படி திருவிழாவில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஆலய நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், சுகாதார வசதிகளை பருத்தித்துறை பிரதேச சபையும் பாதுகாப்பு ஏற்பாடுகளை பருத்தித்துறை பொலிஸாரும் மேற்கொண்டுள்ளனர். இதே நேரம், விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (ஐ-02)

## யாழ்ப்பாணம்...

அனைத்து பயணிகளுக்கும் பனம் பானம் உள்ளிட்ட யாழ்ப்பாண உற்பத்திகள் வழங்கப்பட்டன.

நேற்றைய விமான சேவை ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட பதில் மாவட்ட செயலாளர் ம. பிரதீபன், யாழ். இந்திய துணை தூதுவர் சாய் முரளி, விமானப்படை அதிகாரிகள், இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், பதவிநிலை அதிகாரிகள், பயணிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## கட்சியின்...

வவுனியாவில் நேற்றுக் கூடி வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவிப்பதென அறிவித்தது. இந்தக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா பங்கேற்றிருக்கவில்லை. இந்த நிலையில், செய்தியாளர்கள் அவரை தொடர்பு கொண்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியாக தீர்மானம் எடுத்தாலும் அது எந்த அடிப்படையில் எடுக்கப்பட்டது என்பது தொடர்பில் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும் - என்றும் சொன்னார்.

இதேவேளை, "தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் மாவை சேனாதிராசா கலந்து கொள்ளவில்லை. மத்திய குழுத் தீர்மானம் என்பது ஒரு கூட்டுத் தீர்மானம். மத்திய குழுவில் 30 பேர் கலந்து கொண்டார்கள். மாவை சேனாதிராசாவுக்கும் அறிவித்து அவரும் வருவதாக இருந்தார். உடல் நிலை சரியில்லை என்று தெரிவித்து அவர் கலந்து கொள்ளவில்லை. மூத்த துணைத் தலைவர் தலைமையில் தான் கூட்டம் நடைபெற்றது. மத்திய குழுவின் தீர்மானம்தான் சஜித் பிரேமதாஸவுக்கு அதரவு வழங்குவது என்பது. அதனையே அறிவித்தோம். எதிர்வரும் 4 ஆம் திகதி தபால் மூல வாக்களிப்பு. அதனால் தீர்மானம் எடுக்கப்பட்டது. அவருடன் ஏற்கனவே நான் கதைத்துள்ளேன் - என்று கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ)

## ரணில்...

தலைவர் அநுரகுமார திஸநாயக்கா ஆகியோர் போட்டியிடுகின்றனர். பல கருத்துக் கணிப்புகளின் முடிவுகளின்படி மூவரும் சமஅளவிலான வெற்றிவாய்ப்பிலேயே உள்ளனர். இதனால், ரணில் விக்கிரமசிங்க அல்லது சஜித் பிரேமதாஸ இருவரில் ஒருவரை விட்டுக் கொடுக்க வைக்க பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் பின்னணியில் இந்தியா செயல்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது.

அண்மையில், இலங்கை வந்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் இருவரையும் இணைய வைக்க முயற்சிகளை மேற்கொண்டதுடன் பல்வேறு சந்திப்புகளையும் நடத்தியிருந்தார். எனினும், இருவரும் தத்தமது வெற்றி தொடர்பில் வலுவான நம்பிக்கையை கொண்டிருந்தமையால் தேர்தலிலிருந்து பின்வாங்க மறுத்து விட்டனர் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில், தற்போது சஜித் பிரேமதாஸ பரப்புரை பயணமாக யாழ்ப்பாணம் வந்து தங்கியுள்ளார். கொக்குவிலிலுள்ள ஹோட்டல் ஒன்றிலேயே அவர் தங்கியுள்ளார். இதேநேரம், ஜனாதிபதியின் ஆலோசகரும் அவரின் நெருங்கிய சகாவுமான சாகல ரத்நாயக்கவும் அதே விடுதியில் தங்கியுள்ளார். இந்நிலையில், இருவரும் சந்தித்து பேச்சுகளை நடத்தியுள்ளனர் என்றும் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து ஒருவர் விலகுவது தொடர்பிலேயே பேசப்பட்டன என்று ஊர்ஜிதப்படுத்த முடியாத தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## 5வருடத்துக்கு...

வவுனியாவில் நேற்று நடந்த இயலும் இலங்கை பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றியபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வரிசை யுகத்தை நிறைவு செய்து, வாழ்க்கைச் சுமையை குறைத்து, வரிச் சலுகைகளை வழங்கி, இந்த நாட்டில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அடித்தளமிட்ட எனக்கு தேர்தலில் போட்டியிட உரிமை இருக்கிறது. மக்கள் சிரமப்பட்டபோது ஓடிப் போனவர்களுக்கு செப்ரெம்பர் 21 ஆம் திகதி மறக்காமல் அவர்களுக்கு உரிய இடத்தை வழங்க வேண்டும்.

வரிகளைக் குறைத்து அரச வருமானத்தை குறைக்கும் கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கையே சஜித், அநுரவின் கொள்கைகளாகும். ஆனால், உற்பத்தியை அதிகரித்து அரச வருமானத்தை அதிகரிப்பதே எனது கொள்கை.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் எதிர்காலம் குறித்த நம்பிக்கையின்றி மக்கள் இருந்தனர். பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ஷ விலகினார். சஜித் பதவியை ஏற்பார் என்று நாம் நினைத்தோம். முடியாது என சஜித் அறிவித்தார். மறுநாள் சரத் பொன்சேகா பதவி ஏற்கப் போவதாக அறிந்தோம். ஆனால், யாரும் ஏற்கவில்லை. அதன் பின்னர் கோட்டாபய எனக்கு அழைப்பு விடுத்தார். நான் தனியாகச் சென்றேன். பொறுப்பை ஏற்குமாறு இங்குள்ள எம்.பிகள் எனக்கு தெரிவித்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய பதவி விலகியபோது, எமக்கு பொறுப்புகள் வேண்டாம் என்றனர். அனைவரும் தப்பி ஓடினார்கள். அன்று நான் நாட்டைப் பொறுப்பேற்கவில்லையெனில், இன்னுமொரு பங்களாதேஷாக எமது நாடு மாறியிருக்கும். அந்த நிலையில் என்னை ரணில் ராஜபக்ஷ என்று அவர்கள் திட்டினார்கள். இன்று ராஜபக்ஷவினர் தனியாகச் சென்றுள்ளனர்.


இப்போதுதான் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை நீங்கள் பார்க்கிறீர்கள். எனவே, எனக்கு தேர்தலில் போட்டியிட முழு உரிமையுள்ளது தானே. தப்பியோடியவர்களை என்ன செய்யலாம்? அவர்களை மறந்து விடாதீர்கள். அவர்களுக்கு இரண்டாம் மூன்றாம் இடங்களை பெற்றுக் கொடுங்கள் - என்றார். (ஐ)

# படைகள்மீதான குற்றச்சாட்டுகளை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்!

## திலித் ஜயவீர சொல்கிறார்

கொழும்பு, செப்.

இராணுவத்தினர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை முடிவுக்கு கொண்டு வர உண்மையை கண்டறியும் ஆணைக் குழுவை ஸ்தாபிக்க வேண்டும் என சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்தார்.



கொழும்பில் உள்ள சம்புத்த ஜயந்தி கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை நடந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திய இராணுவத்தினர் நிம்மதியில்லாமல் இருக்கிறார்கள். நாட்டுக்காக உயிர் தியாகம் செய்ததால்தான் அரசியல்வாதிகள் இன்று சுதந்திரமாக மேடை போட்டு தேர்தல் பிரசாரம் செய்கிறார்கள்.

இராணுவத்தினர்மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்குடையவை. முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஏதும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. ஆகவே இராணுவத்தினர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமாயின் உண்மையை கண்டறியும் ஆணைக் குழுவை ஸ்தாபிக்க வேண்டும்.

இராணுவத்தினர் இன்று கௌரவமாக வாழவில்லை. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளார்கள். அரசியலமைப்பின் ஊடாக முப்படையினரது பிரச்னைகளுக்கு தீர்வு காண்போம் என்பதையும் அரசியல் நோக்கத்துக்காக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களையும் நிராகரிப்போம் - என்றார். (ஐ)

## தமிழ் அரசு...

இந்த நிலையில், தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானம் தொடர்பில் சஜித் பிரேமதாஸ தனது எக்ஸ் தளத்தில்,

"இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு நன்றி. நாங்கள் இணைந்து அனைவரும் வெற்றிபெறும், இனவெறியில்லாத பாரபட்சம் இல்லாத எதிர்காலத்தை உருவாக்குவோம். ஐக்கியம் வலு பகிர்ந்துகொள்ளப்பட்ட நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்காலத்தை உருவாக்குவோம் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மட்டு...

சுதர்சனி சிறீகாந்த், கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் வல்லிபுரம் கனகசிங்கம் எனப் பலர் பங்கேற்றனர்.

மட்டக்களப்பு மறை மாவட்டம் 2012ஆம் ஆண்டு தனியான மறை மாவட்டமாக அறிவிக்கப்பட்டது. முதல் ஆயராக பதவியேற்ற ஜோசப் பொன்னையா ஆண்டகை கடந்த 12 ஆண்டுகளாக அந்தப் பதவியில் தொடர்ந்திருந்தார். வயது முதிர்வால் அவர் அண்மையில் ஓய்வு பெற்றிருந்தார். அவரின் இடத்துக்கு கொழும்பு துணை ஆயராக இருந்த அன்ரன் ரஞ்சித் அண்மையில் பரிசுத்த பாப்பரசரால் அறிவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சர்வதேச...

ரெலோ கட்சி தெரிவித்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் 6047 முறைப்பாடுகளை பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒரு இலட்சம் என்று சொல்வது மேற்குலகின் பொய் - இது வெறும் குப்பை என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் ரெலோ கட்சியின் பேச்சாளர் கு. சுரேந்திரன் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

காணாமல் ஆக்கப்பட்டோர் எத்தனை பேர் என்ற வாய்க்கணக்குகளை சொல்வதை விடுத்து சர்வதேச விசாரணை நடத்துங்கள். இதன் மூலமே சரியான கணக்கை அறிந்து கொள்ள முடியும். அப்போதுதான் யார் பொய் சொல்கிறார்கள் யார் உண்மை சொல்கிறார்கள் என்பது வெளிவரும். அதை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் முடியும். அதை விடுத்து காலத்துக்கு காலம் வெளிவிவகார அமைச்சர்களாக வருபவர்கள் தங்கள் மனக்கணக்குகளின் படி காணாமல் ஆக்கப்பட்டோரின் எண்ணிக்கையை கூறுவது அபத்தமாகும்.

சர்வதேச பிரதிநிதிகளால் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம், காணாமல் ஆக்கப்பட்டு இருக்கலாம் என்று சனத்தொகை மதிப்பீட்டின் அடிப்படையில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த உண்மையை கண்டறிவது அரசினுடைய கடமை. அதற்கான நியாயபூர்வமான விசாரணையை நடத்துவதும் அரசின் கடமை. உள்ளூர் விசாரணைகளின் மூலம் நீ பொய் சொல்கிறாய், நான் பொய் சொல்கிறேன் என்று ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதனால்தான் சர்வதேச விசாரணை கோரப்படுகிறது. சர்வதேச விசாரணையின் மூலமே சரியான தரவுகளையும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய ஏற்றுக் கொள்ள ப்படக்கூடிய எண்ணிக்கையும் அறிந்து கொள்ள முடியும்.

இதனால் தான் நாம் சர்வதேச விசாரணையை கோருவதோடு ஐ. நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரும் மனித உரிமைகள் பேரவையும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நிற்கின்றனர்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியினுடைய கருத்தும் சர்வதேச விசாரணையை கோருவதே சாலச் சிறந்தது என்று தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறது. அவர் கூறும் எண்ணிக்களை தமிழ் மக்களோ சர்வதேச பொறிமுறைகளோ ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதையும் வெளிவிவகார அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும்.

காலத்துக்கு காலம் வாய் கணக்குகளை வெளியிடுவதை விடுத்து இம்முறை ஐ. நா. மனித உரிமைப் பேரவையில் எதிர்கொள்ள இருக்கும் பிரேரணைக்கு இணைய அனுசரணை வழங்கி சர்வதேச விசாரணை மூலமாக பொறுப்புக் கூறல் நல்லிணக்கத்துக்கு அரசு தயாராக வேண்டுமே தவிர இந்த மாதிரியான கருத்துக்கள் எந்த முடிவுக்கும் இட்டுச் செல்லாது.

சரியான கணக்குகளை அறிந்து கொள்ள அமைச்சர் அலி சப்ரி அவர்கள் சர்வதேச விசாரணைக்கு தயாரா? என்பதற்கு அவர் பதில் கூற வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 10 அரச துறை ஊழியர்களுக்கு ஜனவரியில் சம்பள அதிகரிப்பு

கொழும்பு, செப். 02

**2025ஆம் ஆண்டு ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 10 அரச துறைகளைச் சேர்ந்த ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இதற்கமைய தரம் III அலுவலக உதவியாளரின் மாதாந்த சம்பளம் 5,450 ரூபாயாலும், தரம் II அலுவலக உதவியாளரின் மாதாந்த சம்பளம் 8, 760 ரூபாயாலும், தரம் I அலுவலக உதவியாளரின் மாதாந்த சம்பளம் 10, 950 ரூபாயாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

தரம் III சாரதியின் சம்பளம் 6,960 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளதுடன், தரம் II சாரதியின் சம்பளம் 9, 990 ரூபாயாலும், தரம் ஐ சாரதியின் சம்பளம் 13,020 ரூபாயாலும் சிறப்பு தர சாரதிக்கு 16, 340 ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.

தரம் III சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களுக்கு 8, 340 ரூபாயும், தரம் உதவியாளர்களுக்கு 11, 690 ரூபாயும் தரம் I உதவியாளர்களுக்கு 15, 685 ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.

முகாமைத்துவ உதவியாளரின் மாதச் சம்பளம் தரம் III இற்கு 10,140 ரூபாயும், தரம் II இற்கு 13, 490 ரூபாயும், தரம் I இற்கு 17, 550 ரூபாயும் அதிகரிக்கப்படவுள்ளது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தரம் III, II மற்றும் ஐ இற்கு முறையே 12, 710, 17, 820, 25, 150 ரூபாய் சம்பவளம் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார பணியாளர்களின் தரம் III பிரிவின ரின் சம்பளம் 12, 885, ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளதுடன், தரம் II இற்கு 17, 945 ரூபாயும், தரம் I இற்கு 25, 275 ரூபாயும் அதிகரிக்கப்படவுள்ளது.

ரேடியாலஜிஸ்ட் மற்றும் மருந்தாளுநர்களின் தரம் IIIஇற்கு 13,280 ரூபாவும், தரம் II இற்கு 18,310 ரூபாவும், தரம் I இற்கு 25,720 ரூபாயும் அதிகரிக்கப்படவுள்ளது.

தரம் III, ஐஐ மற்றும் I தாதியர்களின் சம்பளம் முறையே 13, 725, 18, 835 மற்றும் 26,165 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர்களின் III, II, I தரங்களுக்கான சம்பளம் முறையே 23,425, 29,935 மற்றும் 39,595 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஐந்து பிரிவுகளின் கீழ் ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களின் சம்பளம் 17, 480 ரூபாயாகவும், பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளம் 19, 055 ரூபாயாகவும் அதிகரிக்கப்படவுள்ளது. (எ)

# பலவீனமான அரசாங்கமே வல்லரசுகளின் விரும்பம்!

## ராஜித எம். பி. சொல்கிறார்

கொழும்பு, செப். 02



இலங்கையில் பலவீனமான அரசாங்கம் அமைய வேண்டும் என்று பிராந்திய நாடுகள் உட்பட சில பலம் வாய்ந்த நாடுகள் விரும்புவதாக பாராளுமன்ற உறுப் பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் பலவீனமான அரசாங்கம் அமைய வேண்டும் என்று பிராந்திய நாடுகள் உட்பட சில பலம் வாய்ந்த நாடுகள் விரும்புவதாகவும் இதன் மூலம் அவர்கள் பயனடைய முயற்சிப்பதாகவும் ராஜித புதிய குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொண்டார்.

மேலும், வாக்களிப்பதற்காக வெளிநாட்டு தொழிலாளர்கள் இலங்கைக்கு வருவதைத் தடுக்கும் நோக்கில் ராஜித சேனாரத்ன, அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். (எ)

# கடற்றொழிலாளர்களே அவதானமாக இருங்கள்

கொழும்பு, செப். 02

மேற்கு மற்றும் மத்திய வங்காள விரிகுடாவின் ஆழ்கடல் பகுதியில் பயணிக்கும் நெடுநாள் படகுகளின் கடற்றொழிலாளர்களும், கடல்சார் சமூகமும் அவதானத்துடன் செயல்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற்கு, மத்திய மற்றும் அதனை ஒட்டிய வடமேற்கு வங்காள விரிகுடா கடற்பகுதியில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை வடக்கு ஆந்திரா மற்றும் இந்தியாவின் தெற்கு ஒடிசா கடற்கரை வழியாக அந்த நாட்டிற்குள் நுழைந்தது.

இது குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவிழக்கும். எனவே, குறித்த கடற்பரப்புகளில் கடற்றொழில் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் போது மிகவும் அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.(எ)

# மது விருந்தில் முரண்பாடு; ஒருவர் குத்திக் கொலை!

கொழும்பு, செப். 02

ஒன்றாக மதுபானம் அருந்திய இருவரிடையே ஏற்பட்ட முரண்பாட்டில் ஒருவர் குத்திக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் குருநாகல் - குளியாப்பிட்டி - ரத்மலேவத்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இதில், 31 வயதான ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு,

அந்தப் பிரதேசத்தில் இசைக் கச்சேரி ஒன்று நடைபெற்றது. இதில், பங்கேற்க முன்னர் வீடு ஒன்றில் கொல்லப்பட்டவரும் வேறு சிலரும் இணைந்து மதுபானம் அருந்தியுள்ளனர். இதன்போது இருவரிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்தே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொலை தொடர்பில் கொலையானவரின் உறவினரும் மது விருந்து நடத்தப்பட்ட வீட்டின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலையாளி என்று கூறப்படும் சந்தேகநபருக்கு எதிராக குளியாபிட்டி நீதிமன்றில் கொலை உள்ளிட்ட பல வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்கும்!

## காத்தான்குடியில் ஜனாதிபதி ரணில்

காத்தான்குடி, செப். 02

முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு, காத்தான்குடியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் முஸ்லிம்களின் பல பிரச்னைகளை நான் முடிவுக்கு கொண்டு வந்திருக்கின்றேன். நவாஸ் ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவேன். அது மாத்திரமல்ல கோவிட் காலத்தில் முஸ்லிம்களது ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய இடமளிக்கப்படவில்லை. ஜனாஸாக்கள் முஸ்லிம்களது விருப்பத்துக்கு மாறாக எரிக்கப்பட்டன. அந்த விடயத்தில் நான் கரிசனை கொண்டுள்ளேன். இப்பொழுது அமைச்சர் அலி சப்ரியின் தலைமையிலே ஒரு சட்ட திருத்தத்தை நாங்கள் கொண்டு வரவுள்ளோம். அந்த சட்டத் திருத்தத்தின்படி எந்தவொரு மதத்தினரது உடலையும் அவர்களது உறவுகள் விரும்பினால் அடக்கம் செய்யலாம், எரிக்கலாம் அல்லது தான தர்மம் செய்யலாம் என்பது அந்த சட்டத் திருத்தத்தில் உள்ளங்கும்.



கோவிட் காலத்தில் பலவந்தமாக எரிக்கப்பட்ட ஜனாஸாக்களுக்கு நாங்கள் நஷ்டஈடு தருவோம்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவை நாங்கள் நியமித்து அந்த அறிக்கையைப் பாராளுமன்றத்திலே சமர்ப்பித்து தகுந்த நடவடிக்கை எடுக்க முயற்சிப்போம். இனவாத மதவாத பிரச்னை நமக்குத் தேவையில்லை - என்றார். (எ)

# விசேட டெங்கு ஒழிப்பு திட்டம் இன்று முதல் ஆரம்பமாகிறது!

கொழும்பு, செப். 02

நாட்டின் பல பகுதிகளில் இன்று முதல் நாளை மறுதினம் வரை விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கண்டி ஆகிய மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஐந்து மாவட்டங்களும் டெங்கு அபாயம்மிக்கவையாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



திருகோணமலை வில்லூன்றி கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

# 345 கிலோ பீடி இலைகள் புத்தளத்தில் சிக்கின!

சிலாபம், செப். 02

345 கிலோ பீடி இலைகள் புத்தளத்தில் கைப்பற்றப்பட்டுள்ளன.

புத்தளம் - எரம்புகொடல்லை, மற்றும் கற்பிட்டி - கப்பலடி பிரதேசங்களில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே இந்த பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

எரம்புகொடல்லை பகுதயில் களப்பில் மிதந்து கொண்டிருந்த 4 உரப்பை மூடைகளை கடற்படையினர் கைப்பற்றினர். அவற்றில் 169 கிலோ பீடி இலைகள் மீட்கப்பட்டன.

இதுபோன்று கற்பிட்டி - கப்பலடியில் 171 பீடி இலைகளை கடற்படையினர் கைப்பற்றினர்.

# 2025 - விடுமுறை தினங்கள் வர்த்தமானி வெளியானது

கொழும்பு, செப். 02

2025ஆம் ஆண்டுக்கான பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்களை பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்க விடுமுறை நாட்கள் சட்டத்தின் 4ஆவது பிரிவின்படி தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டில் மொத்தம் 25 விடுமுறை நாட்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org